Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
BODINAYAKANUR

07.01.2021

**DVC No. 15/2019**

Depositions of - பாண்டியம்மாள் ..witness for ...Petitioner Side Witness 1

Name - பாண்டியம்மாள் (PW-1 )

Father's and Husband's name -

Village -

Taluk -

Caste -

Calling -

Religion -

Age -

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20.03.2024.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**( எதிரி ஆஜர். )**

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் டீச்சர் டிரைனிங் படித்துள்ளேன். டீச்சர் டிரைனிங் படித்தது திருமணத்திற்கு முன்னரா அல்லது பின்னரா என்றால் திருமணத்திற்கு பின்னர். என்னை படிக்க வைத்தது என் கணவர் தான் என்றால் படிப்பதற்கு அனுமதிகொடுத்தார், செலவை அம்மா தான் செய்தார். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் தற்போது வேலைக்கு செல்லவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறிய சங்கதிகளை தான் 20.11.2012 ம் தேதியில் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேனா என்றால் ஆமாம். அந்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையும், குற்ற பத்திரிக்கையும் தாக்கல் செய்து சமூக நீதிமன்றத்தில் சிசி 14/2013 என்ற வழக்கு நடந்து வந்தது என்றால் சரிதான்.

மேற்படி வழக்கில் 1ம் எதிர்மனுதாரர், அவரது குடும்பத்தினர்கள் சமூகம் நீதிமன்றத்தால் 04.07.2018ம் தேதி விடுதலை செய்யப்பட்டார்கள் என்றால் சரிதான். மதசாஆ.13 ஆவணமானது என் கணவர் உட்பட 5 பேருக்கு சொந்தமான சொத்து என்றால் பூர்வீக சொத்து, என் கணவர் பெயரில் தனியாக பிரித்து எழுதியுள்ளார்கள். அதற்கானஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரத்தில் ஜெராக்ஸ் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்து வீடு என்றால் வீட்டிற்கு பத்திரம் போடவில்லை,. தோட்டத்திற்குதான் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது மேற்படி எனது கணவருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக வீட்டில்தான் குடியிருந்து வந்தேன் என்றால் முதலில் குடியிருந்தேன் , தற்போது குடியிருக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர் என்னை குடியிருக்க வில்லை என்பது பொய் என்றும், நானாக அவரது அண்ணன் பையனின் கொலை வழக்கில் எதிரியாக உள்ளேன் என்பதால் மேற்படி வீட்டை காலி செய்து விட்டேன் ன்றாலும் சரியல்ல. அண்ணன் பையனின் கொலை வழக்கில் எதிரியாக இருப்பதால் எனது உயிருக்கு பாதிப்பு ஏற்பட்டு விடும் என்பதால் அந்த வீட்டை காலி செய்துவிட்டு வேறு வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மற்றும் அவரை சார்ந்தவர்கள் அந்த வீட்டில் இருக்க முடியாத அளவிற்கு எனக்கு தொந்தரவு கொடுத்ததால் தான் எனக்கும், குழந்தைக்கும் பாதுகாப்பு வேண்டி வீட்டை காலி செய்துவிட்டேன். எதிரியும், நானும் கடந்த 14 வருடங்களாக பிரிந்து தான் வாழ்கிறோம் என்றால் சரியல்ல, 2012ம் ஆண்டில் இருந்துதான் பிரிந்து வாழ்கிறோம். மேற்படி வீட்டில் நான் மட்டும்தான் வாழ்ந்து வந்தேன் என்றும் என் கணவர் என்னுடன் இருக்கவில்லை என்று சொன்னால் என் கணவர் எங்களை விட்டு வேறு ஒரு பெண்ணுடன் சென்று வாழ்ந்து வருகிறார். 2011ம் ஆண்டில் நகைகளை நானே பெற்றுக்கொண்டேன் என்று சொல்லி எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான், மீண்டும் என்னுடன் சேர்ந்து வாழ்வதாக என்னை அழைத்து சென்றார். என் கணவர் வெளியூர் பேக்டரியில் வேலை பார்த்து மாதம் ரூ.20 ஆயிரம் சம்பாதிப்பதாக கூறியுள்ள ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் கணவர் தினந்தோறும் தினக்கூலியாக கூலி வேலை செய்து ரூ.200 பணம் பெற்றுக் கொண்டு வாழ்ந்து வருகிறார் என்றால் தோட்டத்தை

ஒத்திக்கு வைத்துள்ளார். ரேசன் கார்டில் என்னுடைய பெயரை நீக்கிவிட்டு அந்த அம்மாவின் பெயரை சேர்த்துள்ள ஆவணத்தையும் நகலையும் தாக்கல் செய்துள்ளேன். என் கணவர் ஆஸ்துமா நோயாளியாக செலவிற்கு கூட பணமில்லாமல் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் ஆசிரியராக வேலை பார்ப்பதால் சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வருகிறேன் என்றும், நான் கேட்டுள்ள பரிகாரம் கொடுக்க வேண்டியதில்லை என்றால் நான் வேலைக்கு செல்லவில்லை, எதிர்மனுதாரர் என்னை வேலைக்கு செல்வதற்கு விடுவதில்லை. என் கணவரின் அண்ணன் தம்பிகள் உடன் வீண் வாக்குவாதம் ஏற்பட்டு, அவரது அண்ணன் மகன் கொலை வழக்கில் எதிரியாக உள்ளேன் என்றும் நான் தான் எதிர்மனுதாரருக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தி வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அனைத்தும் இந்த வழக்கிற்காகவும், 1ம் எதிர்மனுதாரர் மனஉளைச்சல் ஏற்படுத்துவதற்காகவும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எந்தவித மனஉளைச்சலையும் எதிர்மனுதாரர் ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர் வீட்டில் தான் வசித்து வருகிறேன் என்றும் நகை மற்றும் பண்ட பாத்திரங்கள் எனது வசம் உள்ளது என்றால் சரியல்ல. நான்தான் எதிர்மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2024.03.21 16:55:34 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.